ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2188/19 - 2020 අගෝස්තු මස 12 වැනි බදාදා - 2020.08.12

2188/19 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DS/GFG/L&L/5/98.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின்
இலக்கம்: 4-3/11/2017/UD/170.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாக கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கடவைகள் பிரதேச செயலாளர் பிரிவின், காலி மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட 98 மடவலமுல்ல தெற்கு கிராம அலுவலர் பிரிவின் மடவலமுல்ல தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகம் அவர்களால் நில அளவை செய்து தயாரிக்கப்பட்ட அட்டவணையின் வரைபட இலக்கம் 810023 கொண்ட அட்டவணை திட்டத்தின், வலைய இலக்கம் 03 இல் பத்திர இலக்கம் 06 இல் துண்டு இலக்கம் 231 எனக் காட்டப்பட்டுள்ள 0.0018 ஹெக்டயார் ஆன பின்வரும் பெயர்கள் மற்றும் எல்லைகளைக் கொண்ட காணித் துண்டுகள் சம்பந்தமான எல்லைகள்:

**துண்டு இல. 231**

காணியின் பெயர்: வெல்லபனலஅத்தர ஓவிட்ட; விபரம்: வீட்டுத்தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: என். பீ. ஏகநாயக; விஸ்தீரணம்: 0.0018 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி மு. ப. 09.00 மணிக்கு காலி நான்கு கடவைகள் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. ஹிமாலி ரத்னவீர,
பிரதேச செயலாளர்,
நான்கு கடவைகள் - காலி.

பிரதேச செயலகம்,
நான்கு கடவைகள் - காலி,
2020, ஓகத்து 04.

08 - 566

1A - G 32656 — 12 (2020/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*